செ.வெ.எண்:  693                                                                                    நாள்:  24.10.2020

## தஞ்சாவூர் மாவட்டத்தில் மத்திய குழுவினர் ஆய்வு

தஞ்சாவூர் மாவட்டம், நல்லவன்னியன்குடிக்காடு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் இன்று(24.10.2020) மாவட்ட ஆட்சியர் ம.கோவிந்தராவ் இஆப., அவர்கள் முன்னிலையில் மத்திய உணவு மற்றும் தரக்கட்டுப்பாடு குழு அலுவலர்கள் திரு.யாதேந்திரஜெயின், திரு.யூனுஸ், திரு.ஜெய்சங்கர், திரு.பஷந்த் ஆகியோர் கொண்ட குழுவினர் நெல்லின் ஈரப்பதம் குறித்து ஆய்வு செய்தனர். அப்போது விவசாயிகளிடம் நெல்லின் தரம், ஈரப்பதம் எப்படி உள்ளது என கேட்டறிந்தனர். விவசாயிகள் கூறிய பதிலை குறிப்பெடுத்துக் கொண்டனர். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு தஞ்சாவூரில் இரவு தங்கினர். இந்த ஆய்வின் போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் (பொ) சிற்றரசு ஆகியோர் உடனிருந்தனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நாளை 25-ம் தேதியும் இந்த குழுவினர் சில நெல் கொள்முதல் நிலையங்களில் ஆய்வு செய்ய உள்ளனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.